28th March 1959]

SRI N. R. THIAGARAJAN : பல்வேறு பரம்பரைகள் நாட்டிலே அழிந்து வரும்போது, கிராம முன்சீப்புகள், கர்ணம் இவர்களுடைய பரம்பரை இருந்து வருகிறது. இதை ஸ்பெஷலாக கவனித்து இந்தப் பரம்பரையையும் அழிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இவர்கள் அடிப்படை உத்தியோகஸ்தர்களாக இருப்பதால் இந்த பரம்பரை நீடித்து இருக்கிறது. அதையும் பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

MR. SPEAKER : Let us take up question Nos. 1033, 1034 and 1035 at the end.

*Uniform pension rules for all categories of teachers.*

* 1036 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to adopt uniform pension rules for all categories of teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

*Concession granted to the N.G.O's.*

* 1037 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of) SRI P. S. SANTHANAM) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

என்.ஜி.ஓ.க்கள் (கெஜட் பதிவற்றவர்கள்) தங்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவுடன், அவர்களுக்கு வேலையிலிருக்கும்போது கொடுத்து வந்த மருத்துவ சலுகையும், பிள்ளைகளுக்கு கல்வி சலுகையும் அளிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "No, Sir."

*Training in craft in schools*

*1041 *Q*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் எத்தனை பள்ளிகளில் கைத்தொழில் கல்வி அபிவிருத்தி வசதிகள் அளிக்க உத்தேசம் ?

(ஆ) என்னென்ன கைத்தொழில்களில் இவ்வசதிகள் அளிக்கப்படும் ?

(இ) எந்தெந்த பள்ளிகளில் இத்திட்டம் அமுலுக்கு வரும் ?

(ஈ) இதற்காக சர்க்கார் அளிக்கும் உதவி என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*d*) A statement[a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : தொழில் பயிற்சி அளிக்கப்படுகிற பள்ளிகளுக்கு எல்லாம் முதலிடம் கொடுத்து அந்தத் தொழில் கல்வி பள்ளிகளில் அவைகளுடன் இதர கல்வி முறையை புகுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தொழில் கல்வியில் மட்டும் முன்னேற்றம் வேண்டும் என்பது அல்ல. ஆசிரியர்களை அங்கே அமைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் ஆதாரப் பள்ளிகளுக்கு தனிபட்ட ஒரு திட்டமாக எடுத்து அந்த் திட்ட அடிப்படையில் ஆதாரக் கல்வியை விரிவாக்கப்படுகிறது.

---

[a] Printed as Appendix III on pages 815-817 *infra*.